<u>சுருக்கம்</u>

வேளாண்மை – சிறப்பு விருது – நெல் சாகுபடியில் திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தினை கடைபிடித்து மாநிலத்திலேயே அதிக உற்பத்தி திறன் பெற்ற விவசாயி திரு. இரா. முனுசாமி, அவர்களுக்கு 2018 ஆம் ஆண்டு குடியரசு தினத்தன்று சிறப்பு பரிசு மற்றும் பதக்கம் வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

<u>வேளாண்மை (வே.உ.4) துறை</u>

<u>திருவள்ளுவர் ஆண்டு 2048, மார்கழி–20</u>

அரசாணை (நிலை) எண்.2 நாள்: 04.01.2018

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.246, வேளாண்மை (வே.உ.4) துறை, நாள் 21.12.2011.
2. அரசாணை (நிலை) எண்.297, வேளாண்மை (வே.உ.4) துறை, நாள் 31.12.2012.
3. அரசாணை (நிலை) எண்.1, வேளாண்மை (வே.உ.4) துறை, நாள் 2.1.2014.
4. அரசாணை (நிலை) எண்.6, வேளாண்மை (வே.உ.4) துறை, நாள் 8.1.2015.
5. அரசாணை (நிலை) எண்.16, வேளாண்மை (வே.உ.4) துறை, நாள் 8.1.2016
6. அரசாணை (நிலை) எண்11, வேளாண்மை (வே.உ.4) துறை, நாள் 19.1.2017.
7. வேளாண்மை இயக்குநரின் கடித எண்.நெ&சி2/93078/2016, நாள் 09.11.2017 மற்றும் 6.12.2017.

*******

<u>ஆணை:–</u>

நவீன தொழில் நுட்பத்துடன் செயல்படுத்தப்படும் பல்வேறு சாகுபடி முறைகளில் திருந்திய நெல் சாகுபடி முறையே உணவு உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய சிறந்த முறையாகும். இம்முறைக்கு அதிக ஊக்கம் அளிக்கும் வகையில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பிற்கிணங்க, மேலே ஒன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், நெல் சாகுபடியில், திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தினை கடைபிடித்து மாநிலத்திலேயே அதிக உற்பத்தி திறன் பெறும் விவசாயிக்கு ஒவ்வொரு ஆண்டும் குடியரசு தினத்தன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சிறப்பு பரிசுத் தொகை ரூ.5.00 இலட்சம் (Special Award) மற்றும் ரூ.3,500/– மதிப்புடைய பதக்கமும் வழங்க ஆணையிடப்பட்டது. மேலும் இப்போட்டித் தொடர்பான பயணப்படி செலவுக்காக ரூ.10,000/– உட்பட, மொத்தம் ரூ.5,13,500/– ஒப்பளிப்பு செய்தும் ஆணை வெளியிடப்பட்டது.

2. அதனைத் தொடர்ந்து 2011–12 முதல் 2015–16 வரை ஒவ்வொரு ஆண்டிலும் நெல்சாகுபடியில் திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தினை கடைப்பிடித்து

மாநிலத்திலேயே அதிக உற்பத்தி திறன் பெற்ற ஒரு விவசாயிக்கு ரூ.5,00,000 (சிறப்பு பரிசு) மற்றும் ரூ.3500 மதிப்புடைய தங்கமுலாம் பூசப்பட்ட வெள்ளிப்பதக்கம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் குடியரசு தினவிழாவில் வழங்கி சிறப்பிக்கப்பட்டு வருகிறது.

3. மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிமுறைகளின்படி, 2016–17 ஆம் ஆண்டு திருந்திய நெல் சாகுபடி முறை பயிர் விளைச்சல் போட்டியில் கலந்து கொண்டு 18,184.4 கிலோ/ஹெக்டர் மகசூல் எடுத்துள்ள தருமபுரி மாவட்டம், குள்ளனூர் கிராமம், விருபாட்சிபுரம் வட்டத்தை சேர்ந்த திரு. இராம கவுண்டர் என்பவரது மகன் திரு. இரா. முனுசாமி அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2018–ஆம் ஆண்டு குடியரசு தின விழாவில் ரூ. 5.00 இலட்சம் சிறப்பு பரிசுத் தொகை மற்றும் ரூ.3500/– மதிப்புடைய தங்கமுலாம் பூசப்பட்ட வெள்ளிப் பதக்கம் வழங்குவதற்கு பரிந்துரை செய்து வேளாண்மை இயக்குநர் மேலே ஏழாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

4. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்று, 2016–17 ஆம் ஆண்டு நெல் சாகுபடியில், திருந்திய நெல் சாகுபடி தொழில் நுட்பத்தினைக் கடைப்பிடித்து, CO51 ரகம் சாகுபடி செய்து மாநில அளவில் அதிக உற்பத்தித் திறன் பெற்றுள்ள தருமபுரி மாவட்டம், விருபாட்சிபுரம் வட்டாரம், குள்ளனூர் கிராமத்தை சேர்ந்த திரு. இராம கவுண்டர் என்பவரது மகன் திரு. இரா. முனுசாமி அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2018–ஆம் ஆண்டு குடியரசு தினத்தன்று சிறப்பு பரிசுத் தொகை ரூ.5.00 இலட்சம் மற்றும் ரூ.3,500/– மதிப்புடைய தங்கமுலாம் பூசப்பட்ட வெள்ளி பதக்கமும் வழங்கலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது. மேலும், மாநில அளவில் நடைபெறும் திருந்திய நெல் சாகுபடிமுறை பயிர் விளைச்சல் போட்டி தொடர்பான பயணப்படி செலவுக்காக (விருதுக்கான விவசாயியை தேர்வு செய்யும் குழுவில் உள்ள விவசாய உறுப்பினர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயி ஆகியோரின் பயணம் உட்பட) ரூ.10,000/– உட்பட மொத்தம் ரூ.5,13,500/– (ரூபாய் ஐந்து இலட்சத்து பதிமூன்றாயிரத்து ஐந்நூறு மட்டும்) ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணை வெளியிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

2401 – 00 – பயிர் வளர்ப்பு – 109 – விரிவாக்கப் பணியும் உழவர் பயிற்சியும் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் –II–மாநிலத்திட்டம்–KI–திருந்திய முறை நெல் பயிரிடுதலில் மிக அதிகமாக நெல் விளைச்சலை ஈட்டும் விவசாயிக்கு சிறப்பு விருது வழங்குதல்.

(i) 04 பயணச் செலவுகள் –01–சுற்றுப் பயணப்படிகள்
(து.தொ.கு: 2401-00-109-KI-0416) ரூ. 10,000 /–

(ii) 59.பரிசுகளும் வெகுமதிகளும்
(து.தொ.கு 2401–00–109–KI–5902) ரூ.5,03,500 /–

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள வேளாண்மை இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேலும், பயணப்படி செலவினத் தொகையினை வேளாண்மை இயக்குநர் மற்றும் சம்மந்தப்பட்ட மாவட்ட

வேளாண்மை இணை இயக்குநர் முன்பணமாக செலவு மேற்கொள்ள அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.64130/வேளாண்மை/2017, நாள் 19.12.2017–ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி,
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
வேளாண்மை இயக்குநர், சென்னை–5.
மாநில முதன்மைக் கணக்காயர் (G&SSA), சென்னை – 18.
மாநில முதன்மைக் கணக்காயர் (E&RSA), சென்னை – 18.
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை–18/(பெயரில்).
மாநிலக் கணக்காயர், சென்னை–18/(பெயரில்).
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–8.
மாவட்ட ஆட்சித் தலைவர், தருமபுரி மாவட்டம்.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
உறைவிட தணிக்கை அலுவலர், மாநில முதன்மை கணக்காயர் அலுவலகம் (சமூகத் தனிக்கைப் பிரிவு), சென்னை–9.
வேளாண்மை இணை-இயக்குநர், தர்மபுரி மாவட்டம்.

<u>நகல்:–</u>
திரு. இரா. முனுசாமி த/பெ திரு. இராம கவுண்டர், குள்ளனூர் கிராமம், விருபாட்சிபுரம் வட்டாரம், தருமபுரி மாவட்டம்.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதன்மை செயலாளர்–II, சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர், சென்னை–9.
வேளாண்மை (பொது/வ&தி) துறை, சென்னை–9.
பொதுத் துறை, சென்னை–9.
நிதித் (வேளாண்மை / வரவு செலவு / பொது I & II) துறை, சென்னை–9.
வேளாண்மை (அநமு3) துறை, சென்னை–9. (2 நகல்கள்) (அட்டவணைப்படுத்தும் வகைக்கு).
உதவி நிரளர், வேளாண்மைத் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு/ உதிரிகள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

க.வெ. ஜெனி
பிரிவு அலுவலர்
இரா.வெ
4/1/18.